931

உ

சிவமயம்.

# ஸ்ரீ மதுராபுரி அம்பிகைமாலை.

இது

திண்டுக்கல் வக்கீல்

எல். ஏ வெங்குசாமி யையரால்

இயற்றப்பெற்று

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப் பெற்றது.

1914

25:38.21145
N14
171695

உ

# ஸ்ரீ மதுராபுரியம்பிகை மாலை.

—(०)—

## விநாயகர் துதி.

திருவால வாயுடை யாரருட் செல்வச் செழுங்கனியெங்
கருமா லகற்றிடுங் கற்பக மங்கயற் கண்ணிகழற்
கொருமாலை யார்தமிழ் மாலையின் கோதற் குறுதுணையாய்
வருவான் வரந்தரு வானைங்க ரப்பெரு மான்மகிழ்ந்தே.

## நூல்.

பொன்னைப்பு யங்கொண்ட மாலுநின் றேத்தும் புராதனனு
மன்னற்கி சைந்தம னோன்மணி யேமன மெய்மொழியா
லுன்னற்ப தந்தொழு மெய்யடி யாரவ ருட்கமலத்
தன்னப்பெ டையெனு மாமது ராபுரி யம்பிகையே. (1)

588
894.551
OFFICE OF THE REGISTRAR
18 DEC 1914
MADRAS.

படியாளு மன்னரும் விண்ணவ ரும்பணிந் தேத்துமருட்
பொடியார்ந்த மேனியெம் புண்ணிய னாரிடம் பூத்தபசுங்
கொடியே கொடியிடைக் கோகில மேயெழிற் கோகனக
வடிமா மலர்கொடுத் தாள்மது ராபுரி யம்பிகையே. (2)

சுத்தமெய்ஞ் ஞானச் சுகக்கட லேயஞ் சுகமமர்ந்த
வத்தமி லங்கவன் தந்நாளி லேநின் றறம்வளர்த்த
வுத்தமி யேமலை மாதுமை யேசிவ ஞானவொளி
யத்தமி யாதவொன் மாமது ராபுரி யம்பிகையே. (3)

கல்லுங் கரையக் கனிவிக்கு நின்னருட் காட்சிநித
மொல்லும் படிக்குநின் னெண்புக ழேபுகழ்ந் தோதிவினை
வெல்லும் படிக்கு மலர்த்தாட் டுணைதந்து மெய்த்துணையா
யல்லும் பகலுநின் றருள்மது ராபுரி யம்பிகையே. (4)

சிந்தனை நின்கழற் கேவைத் துணையருச் சிக்குமருட்
சிந்தச் மேவிந லம்பெறு மாறுகை தூக்கியென்முன்

வந்தெனை யேற்றுவ ரந்தரு வாயிம வான்பயந்த
வந்தரி சுந்தரி யேமது ராபுரி யம்பிகையே. (5)

மர்லேறு மைக்குழ லார்மயல் வாட்ட வதங்குமெனைப்
போலேயி ழிந்தவர் வேறுள ரோவிப் புவனியிலே
வேலேவி யக்குநின் றண்ணளி நோக்கெனை மேவினது
ஞாலேத மைத்திடு வேன்மது ராபுரி யம்பிகையே. (6)

ஐயான னங்கொண்ட மெய்யான தெய்வமெய் யன்பருக்குப்
பொய்யாத தெய்வம் புகழ்பூத்த தெய்வமம் பூதரத்தைக்
கையாற்கு னித்தமுக் கட்டெய்வ முள்ளுறக் காதலிக்கு
மையாய் வழங்குகை யாய்மது ராபுரி யம்பிகையே. (7)

காணத் தகுவது நின்றிருக் காட்சி கணித்துமிகப்
பேணத் தகுவது நின்புக ழேமுடி மேற்பிறங்கப்
பூணத் தகுவது நின்னருட் பூங்கழல் பூதலத்தி
லாணர்க் குறைவிட மாமாது ராபுரி யம்பிகையே. (8)

025 36 2105

சொற்பத மேகடந் தப்பால் விளங்குஞ் சுயஞ்சுடரே
நிற்பதம் போற்று நிலையறியாது நிலை யறியாப்
புற்புத வாழ்க்கையிற் பட்டுழல் வேனருட் போதமுறி
லற்புத மற்புத மேமது ராபுரி யம்பிகையே. (9)

கணமேனு நின்னருட் காட்சிகண் டுள்ளங் கசிந்துருகுங்
குணமேவி நின்னடி யாருடன் கூடிக் குலாவியுறு
மணமேவி வையக மையலு றாதுன் மலரடிக்க
ணணவே வரந்தரு வாய்மது ராபுரி யம்பிகையே. (10)

சொல்லா லளக்கப்பெ ருப்பெருந் தொல்புகழ்ச் சொக்கர்தமக்
கில்லா ளெனுமுறை யேற்றுச் சுடர்விட் டிலங்குவைவேல்
வல்லாள னைப்பெற்ற மாமயி லேநின் மலர்ச்சரண
மல்லாற் சரணிலை யாள்மது ராபுரி யம்பிகையே. (11)

தேனேறு பூங்குழற் சேல்விழி யார்வலைச் சிக்கிலுற்ற
நானேத னென்பிழை யோபல வென்பதிந் நாடறியும்

மானேறு மொண்மழு வுந்திரி சூலமு மேவயங்க
வானேறு வான்றுணை யேமது ராபுரி யம்பிகையே. (12)

தன்னந் தனிச்சிறி யேன்றலை தாழ்ந்தருட் டாண்மலரின்
முன்னின் றகங்குழைந் துன்புகழ்ச் சீர்கண் முறைமுறையாப்
பன்னும் படிக்கருள் பாலித்தி டாயன்பர் பாலருட்பா
லன்னம் பலித்திடுந் தென்மது ராபுரி யம்பிகையே. (13)

கவிபாடு மத்திறம் பெற்றுயர்ந் தோங்கிடும் பல்கவிஞர்
செவியார நின்புக ழோதவு நாற்கவிச் சீரறியாப்
புவிவா ழுலுத்தரைப் போற்றும னுன்புகழ் போற்றுமன்பே
யவிர்வான் வரந்தரு வாய்மது ராபுரி யம்பிகையே. (14)

பொய்யிற் படிந்துழல் வேனுநின் றண்ணருட் பூங்கழற்கு
மெய்யன்பு பூண்டுறு மெய்ப்புகழ் பாடி விளங்கவைப்பாய்
சையம் பொருங்குயத் தையனல் லாய்குயந் தாங்குமிடை
யையங் கொளப்பெறுந் தென்மது ராபுரி யம்பிகையே. (15)

பொன்னார் கடுக்கைப் பிரானருள் மேவிய புண்ணியையென்
றென்னாளு மன்னுல கேத்திப் பழிச்சு மெழிற்சரண
முன்னாத வென்னையுங் காத்தருள் வாய்புவி மூன்றினுக்கு
மன்னா யெவைக்குமுன் னாமது ராபுரி யம்பிகையே. (16)

ஓயாக் கவலைகட் குள்ளாகி யானுள முட்குலைந்து
தேயா முனம்வந்து தேற்றிடு வாயெனத் தேம்புறுமிச்
சேயா மெனைப்பெற்ற தாயான நீயென் சிறுமைபல
வாயாம லாண்டருள் வாய்மது ராபுரி யம்பிகையே. (17)

பதம்பெறு மாறுநி தம்பணிந் தேத்திய யண்ணவராம்
பதஞ்சலி யார்முனம் வேண்டற்கு வந்துபங் கேருகச்செம்
பதஞ்சலி யாதுந டம்பயில் வாரடி யார்பவமீங்
கதஞ்செயு மாரியை யேமது ராபுரி யம்பிகையே. (18)

ஆசைப் பசாச மதுவே பிடித்தெனை யாட்டவதின்
மோகப் படாதுமுப் போதினு முன்றிரு முன்னர் நின்றுண்

ணேசத் தழுந்தியுண் பாதார விந்தத்தி னீழலுறற்
காசத்தி தந்தருள் வாய்மது ராபுரி யம்பிகையே. (19)

விதிமுத லாதிய தேவர்தொ ழும்பத மென்மலரைத்
துதிசெயு மாறடி யேற்கருள் வாயருட் சொக்கரெனு
மதிநதி மன்னிய வார்சடை யார்மண மாதரசா
மதிமதி சுந்தர மாமது ராபுரி யம்பிகையே. (20)

பொற்பங் கயத்தட மேவிக் குளிர்ந்த புனல்படிந்து
கற்பங் கடந்த சிவஞான யோகியர் கண்டுளித்துப்
பொற்பச் சிவந்தபொற் றுண்மலர்க் கேதொண்டு பூண்டவர்செய்
யற்புக் குவக்குமம் மேமது ராபுரி யம்பிகையே. (21)

நின்னெழில் கண்டும னந்தடு மாறிவெ ணீருருப்பெண்
கன்னிய னன்னலந் தற்பா ஞர்செஞ் சடைமுடிமேற்
றுன்னுற வைத்தத ணின்று குழைந்து னருட்டுணைத்தா
ளன்னவள் போற்றிடுந் தென்மது ராபுரி யம்பிகையே. (22)

சீதப் புனல்வயல் சூழப் பெருநகர் தென்ன னுவந்
தோதித் தொழுநகர் கூடற் றிருநக ரொண்கயிலை
நாதற் குறுவிளை யாடற் கொருநகர் நன்னகரெம்
மாதித் தனிநக ராமது ராபுரி யம்பிகையே. (23)

மாதா வெனமறை யாதிய வோதி வழுத்துமுறை
நீதா னடைகுவை யாற்பிறர் பாலது நேர்வுறுமோ
தீதாள் பவனெனை நீயாண் டருள்செயல் தீதலவே
றுதா ரமுமிலை யேமது ராபுரி யம்பிகையே. (24)

காரண காரிய மாகிய யரவுங் கடந்தபரி
பூரண ஞானசு கோதய மாய்முப் புவனமுமுத்
தாரண மேசெய வந்த தனிச்சுட ரேதகைசா
லாரண வோதை யருமது ராபுரி யம்பிகையே. (25)

தீரா வினைபிணி தீரத் திருவருள் செய்யுமியற்
சீரா ளருள்கொடு பாராள் பவள்பர தேவிநறுங்

காரார் குழலுமை யாளங் கயல்விழி யாள்கனிவார்க்
காரா வமுதனை யாள்மது ராபுரி யம்பிகையே. (26)

சீரறி யாதுநின் சீர்பாடி நின்னருட் சீர்பெறுவான்
கூரறி யாமதி யேனுட் குறிப்பைக் குறித்துமிகப்
பேரறி வாளர் பழிக்கப் பெருமற் பிறங்கிடவெற்
காரறி வீகுவை யேமது ராபுரி யம்பிகையே. (27)

பொன்னசை கொண்டுமுன் றேனன்றி யுன்மலர்ப் பூங்கழல்கட்
கென்னாளு முள்ளன்பி லேனென்னை யாளற் கிதுதருணந்
தென்னார்ந்த பூம்பொழில் சூழ்திருக் கோயிலிற் றேவர்தொழு
மன்னாவு மைக்குழ லாய்மது ராபுரி யம்பிகையே (28)

வல்லாண்மை பேசி வழக்கெடுத் தோதி வகைதொகையாய்ச்
சொல்லாத பொய்ம்மொழி யேதினந் தோறுஞ் சொலச்சலியாப்
பொல்லாத வெற்குநின் பொன்னடித் தாமரைப் போதினையே
யல்லாற் புகலிலை யாள்மது ராபுரி யம்பிகையே. (29)

காவிக் கருவிழி யாலெயாப் புயர்வறி யாய் கனிவிற்
பாவித் தளிமலர் தூவிப் பதமலர் பாடிமுறை
கூவித் தொழுமடி யாருற் பவநிலை கூடலுறு
தாவிக் கொருதுணை யாமது ராபுரி யம்பிகையே. (30)

சத்திக்கு மக்கிசூழ் வுற்றவித் தாரவித் தாரணியி
லெத்திக்கு மேசெழித் தெங்கெங்கு மேநிலைத் தெப்பொழுதும்
வத்திக்கு மெய்ப்புகழ்க் குத்தக்க வித்தக மால்விடையெம்
மத்தற்க கத்தவ ளேமது ராபுரி யம்பிகையே. (31)

முற்றிற்று.

— —